"நமது சிறப்புற்றிருக்கும் விருந்தினர்களுக்கு மிக்க மனமார்ந்த நல்வரவு கூறி, மேன்மைபொருந்திய வைஸ்ராயவர்கட்கும் மேன்மைபொருந்திய வைஸ்ராயினியவர்கட்கும் உடல்நலம் அளிக்கும்பொழுது, மாட்சிமைதங்கிய மன்னர் சக்கரவர்த்தி பெருமானின் இந்தியப் பிரதிநிதியையும் அவ்வளவு ... மனைவியாரையும் எனது சமஸ்தானத்திற்கு உத்தியோக முறைமையில் விஜயம்பண்ணும் தருணத்தில் மேன்மைபொருந்திய பட்டமன்றி, இவ்வளவு சாந்தத்தையுடையவும் நாட்டமுடையவும் இரு பழைய உற்ற நண்பர்களை வரவேற்கும் தனிப்பட்ட இன்பமிக்க கடமையை நிறைவேற்றுவதாகவும் எனக்குத் தோன்றுகிறது. வில்லிங்டன் பிரபு அவர்கள் இந்தியாவிலுள்ள இரண்டு பெரிய மாகாணங்களைப் பரிபாலனம் செய்திருப்பதுமன்றி, வெளிநாடுகளுக்குச் சென்று டிப்ளொமாடிக் மிஷன் (Diplomatic Mission) என்னும் அரசியல் தூது குழாத்தின் தலைமை வகித்தும்

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலுள்ள தனியார் டொமினியனை (Senior Dominion—முதன்மைபெற்ற ராஜ்யம்) மேன்மேலும் செலுத்தியும் சிறந்த அனுபவம் பெற்றுள்ளார்கள். அதன்பின் அவ்வவர் இந்தியாவின் அரசப்பிரதிநிதி பதவியை ஏற்றுக்கொண்டார்; இந்நாட்டின்பொருட்டு அவர்கள் [illegible] முயற்சிகளுக்கும் நாட்டின் சால சிறந்த [illegible] அவர்கட்குள்ள ஆவலுக்குமாக இந்நாடு அவ்வவர்பால் [illegible] கடப்பாடுடையதாயிருக்கிறதென்பதை நாம் அறிவோம். பற்பல துறைகளிலும் அவ்வவர் உழைத்திருக்கும் உழைப்பிற்கு அவர்களது [illegible] உணர்வோம்.

"வைஸ்ராய்மார்களின் திருவிதாங்கூர் விஜயம் அடிக்கடி நிகழ்ந்திருப்பதில்லை. [illegible] பிறகு திருவிதாங்கூருக்கு முதன்முதலாக விஜயம் செய்த வைஸ்ராய் தங்களுக்கு முன்னிருந்தவரேயாவார். இந்திய அரசாங்கத்தின் தலைமை இருப்பிடத்தினின்று [illegible] திருவிதாங்கூருக்கு இருக்கவருகிறது; [illegible] "[illegible]" [illegible] திருவிதாங்கூர் [illegible] தாங்கள் உணர்ந்தீர் [illegible] 1920-ஆம் வருடத்தில் சென்னை கவர்னராயிருக்கும்போது தாங்கள் [illegible] விஜயஞ்செய்து, [illegible] திருவனந்தபுரத்தில் [illegible] புதுப்பித்துக்கொண்டதுமல்லாமல், தங்களை நமது குடிகளின் அன்புக்கு உரியராக்கிக்கொண்டீர்கள்; 1923-ஆம் வருஷத்திய தங்கள் இரண்டாவது விஜயம், [illegible] தங்களைப்பற்றி அவர்களுக்கிருந்த உணர்ச்சியை உறுதிப்படுத்தியதுமன்றி [illegible] தாங்கள் அக்கறை கொண்டு [illegible] உற்சாகமூட்டியது.

"[illegible] பற்றிய அநுவல் பிருதியாக, 1931-ஆம் வருடத்தில் எனது ஆட்சி அதிகார அளிப்பின்போது தங்களுக்கும் தங்கள் சீமாட்டியாருக்கும் இந்த மைசூர் [illegible] செய்ய முடியாமற்போனது மிகுந்த வருத்தத்திற்குக் காரணமாயிருந்தது: ஆனால் [illegible] தாமதியாமல் எங்கள் ராஜ்யத்திற்கு விஜயஞ்செய்வதாகக் கூறிய வாக்குறுதியை நிறைவேற்றத் தங்களுக்கு முடிந்ததுபற்றி யான் மகிழ்ச்சியடைவதுமல்லாமல், தங்களுக்கும் தங்கள் சீமாட்டியாருக்கும் எனக்கும் என் குடும்பத்தினர்கட்கும் [illegible] சிறப்பாக ஏற்பட்டிருக்கும் அநேக பிணைப்புகளை எனது [illegible] புதுப்பித்துக்கொள்ள எனக்கு இயன்றிருப்பது என் நற்காலமென்றே எண்ணுகிறேன். [illegible] சக்கரவர்த்தி பெருமானின் பிரதிநிதியென்ற நிலையில் தங்களுக்கு [illegible] அளிக்கும் வரவேற்பும் அதுபோன்றே [illegible] ஆகும். என் குடும்பத்திற்கு [illegible] அரசப் [illegible] என்னுயிருடன் இயற்கையாகக் [illegible]; ஆனால் அம்மையில் யான் [illegible] [illegible] சக்கரவர்த்தி திருவுளத்தையும் சக்கரவர்த்தினி திருவுளத்தையும் [illegible] [illegible] உண்மையான நட்புபத்திய [illegible] உணர்ச்சியாக [illegible] அன்னையாருக்கும் திருவிதாங்கூர் பிற்கால அரசர்களின் அன்னைமார்களுக்கும் [illegible] (Their Highnesses [illegible]) என்ற உயர்ந்த பட்டத்தை அளிப்பதற்காகத் தங்கள் [illegible] சக்கரவர்த்தி திருவுளத்தின்பால் [illegible] [illegible] நன்றியைச் செலுத்த இந்தச் சந்தர்ப்பத்தை யான் பயன்படுத்திக்கொள்கிறேன்.

"1931-ஆம் வருடத்தில் எனது ஆட்சி அதிகார அளிப்பின்போதும் தாங்கள் [illegible] [illegible] இனிய செய்திக்கு மறுமொழியாகவும், யான் பெற்றிருக்கும் [illegible] என் முன்னோர்களின் [illegible] அன்பும் நிறைந்த ஆட்சியின் சிறந்த பரம்பரையை [illegible] என் ஆவலையும் யான் குறிப்பிட்டிருந்தேன். ஒரு புறத்து, [illegible] சில உலக நிலைமைகளில் உறுதியான [illegible] அரசாங்கக் கொள்கையைக் காப்பாற்ற எனக்குள்ள கடமையையும், மறுபுறத்து, என் பொதுப் [illegible] எல்லா வகுப்பினர்களையும் சமுதாயத்தினர்களையும் சமமாகவும் நீதியாகவும் பரிபாலிக்க எனக்குள்ள கடமைப்பாட்டையும் கருத்திற்கொண்டு, எனது முன்னோர்களின் [illegible] பின்பற்றுவதற்கான [illegible] மீண்டும் எடுத்துரைத்துக்கொள்ளலாமா?

"[illegible] அபிவிருத்திக்காக எனது [illegible] ஆட்சி [illegible] [illegible] மக்களின் [illegible] [illegible] [illegible] பரிணமித்து [illegible] [illegible] எத்[illegible] [illegible] தங்கள் நாட்டிற்கு வேண்டிய [illegible] எனது பிரஜைகளின் [illegible] [illegible] [illegible] [illegible] பஞ்சாயத்துக் கோர்ட்டுக்களின் அதிகாரப்ப

ப்பு, சட்டத்தாமத பிரசங்கம், சகாயிர்மான வரிகள், தாழ்ந்த வகுப்பினர்களுக்கு உதவி புரிவது ஆகிய [illegible] என்பது அரசாங்கத்தாரால் கவனிக்கப்பட்டு வருகின்றன. சில காலத்தவரையில், கூட்டுறவு சங்கங்கள் [illegible] அதிக நன்மை பயக்கும் பொருட்டு அவைகளில் நடை [illegible] விசாரிக்க நடக்குமாகும்; ஆரம்பம் கெசவம் நடக்கும் ஒரு [illegible] தொடங்குவதைப் [illegible] வேலைகள் [illegible] வருகின்றன. சில பிரதேசங்களுக்குள்ள [illegible] மீன்பாசன வேலைகள் தீவிரமாகத் துவக்கப்பெற்றிருக்கின்றன; இவை [illegible] எனும் [illegible] சக்தி [illegible] ஆரம்பிக்கப்பெற்று, நாட்டின் [illegible] முன்னேற்றத்திற்கான [illegible] மின்சார சக்தி [illegible] திட்டம் [illegible] இருக்கிறது. [illegible] வியாபார [illegible] கைத்தொழில் [illegible] உதவி [illegible] மிக்க இடமிருக்கிறது. எப்பர், [illegible] பொருள்கள், [illegible] இயந்திரங்கள், [illegible] விளைகள் [illegible] வியாபாரிகளுக்கு உதவிபுரியும் பொருட்டு [illegible] கைக்கொள்ள வேண்டி வந்தது. [illegible] நூற்றுக்கு 50 விதம் [illegible] 12½ விதம் வரையில் தள்ளிக்கொடுத்திருக்கிறது; ஒரு விலையிடைமான [illegible] ஏற்படுத்தியிருக்கிறது, தென்னை விவசாயத்தின் [illegible] ஆகியவைபற்றி ஆராய்ச்சி நடத்தும் காரியத்தில் [illegible] ஆராய்ச்சிக் கழகத்தோடு இக்க [illegible] ஒத்துழைத்து வருகிறது. [illegible] விரிவான திட்டங்கள் [illegible] கல்வியையும் [illegible] பற்றிய [illegible] கல்வி [illegible] விசாரணை [illegible] சிர்திருத்தங்களைப் [illegible] வேண்டி [illegible] தனியாக நியமிக்க [illegible] அவர்கள் [illegible] மட்டுமல்ல, [illegible] இலவசகல்வித் திருத்தி அமைக்கும்பொருட்டும் அவரைப் [illegible] கல்வி இலாகா [illegible] நிர்வாகத்திலிருக்கிறது. இந்த [illegible] நூற்றுக்கு இருபத்து [illegible] கல்வி [illegible] தென்னிந்தியாவின் [illegible] இத்துணைத் [illegible] கருதலாம். [illegible] பொருள்களில் [illegible] ஒற்றுமை [illegible] வேண்டப்பட்டிருக்கின்றன. [illegible] இலாகாவையும் [illegible] வர்களையும் [illegible] நிலையத்தை [illegible] ஒரு புதிய பொதுஆரம்ப [illegible] இலாகாவாக அமைத்திருக்கிறது. [illegible] திறக்கப்போகும் [illegible] தாமரை [illegible] நிர்வாகத் திட்டமும் திருவனந்த [illegible] வாழ்க்கைநிலைக்கும் [illegible] அளவற்ற முன்னேற்றத்தை விளைவிக்கும்.

"[illegible] அமைப்பில் திருத்தியமைக்கப்படும்; [illegible] ஆலயப் [illegible] சிக்கலான பொருளைக் குறித்து ஒரு [illegible] வருகிறது; [illegible] வர்கட்கும் [illegible] உதவி புரிவதற்கு ஒரு திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது.

"[illegible] தங்களுக்குத் தெரிவிக்க [illegible] பூர்ணமான ஒரு சட்டசபைச் சீர்திருத்தம் [illegible] பிறப்பித்திருக்கிறேன். சட்ட நிர்மாணப் [illegible] ஆகியவற்றை [illegible] விரிவான அதிகாரம் [illegible] பூரணமான [illegible] ஸ்ரீமூலம் [illegible] ஸ்ரீ சித்திரை [illegible] சபையென்றும் [illegible] இரண்டு [illegible]; [illegible] அசாங்கத்தாரு [illegible] உறவுகளையும் [illegible] தவிர்த்து, எல்லா [illegible] பொருள்களையும் [illegible] செய்யச் சட்டசபைக்கு அதிகாரம் அளித்திருக்கிறது. இச்சீர்திருத்தங்கள் [illegible] அமைத்திருக்கின்றன. திருவிதாங்கூரைப் போன்ற கல்வியறிவிற்சிறந்த ஒரு [illegible] சீர் [illegible] யங்களாகவே [illegible]; ஆனால் [illegible] தொடர்ந்து [illegible] பெறுவின் ஓர் பிரயோகத்தால் [illegible] அவைகளை [illegible] படிப்படியாகவும் [illegible] வேண்டியிருக்கிறது. எல்லா [illegible] புதிதாகத் தோன்றியிருக்கும் சமூக உணர்ச்சி அதற்கு உதவியாகவிருக்கும்.

"[illegible] சக்கரவாளத்தில் தென்படப்போகும் புதிய [illegible] இந்தியாவில் [illegible] எனது [illegible] இயலும்படி செய்வதற்கு வேண்டிய [illegible] உரியகாலத்தில் [illegible] பூரணமாக நம்புகிறேன். கல்வித் தேட்டத்திலும் ஒழுக்கு பரிபாலனத்திலும் [illegible] திறமையும் பண்பும் [illegible] சரித்திரப் பற்றும் [illegible] மிக முன்னணியில் நிற்க [illegible] பெருமை [illegible] எண்ணுகிறேன். [illegible] பரிபாலிப்பதற்கு நான் எவ்வளவையாகும் முயற்சி செய்வேன். [illegible] ஒத்துழைக்கும் [illegible] வேண்டிக்கொள்வதுமன்றி, [illegible] நிலையில் எங்களுக்கு உதவி புரியுமாறு தங்களையும் வேண்டிக்கொள்ள [illegible]

புரிகிறேன். எங்களது பிரயாணம் நாலாங்களைப் பொறுத்தமட்டில், தங்கள்பாலிருந்து எங்களுக்கு எப்பொழுதும் நீதி கிடைக்குமென யான் நம்புகிறேன். எங்கள் ஸம்ஸ்தானத்தின் முன்னேற்றத்தைத் தாங்கள் அருள்கூர்ந்து அக்கறையுடன் கவனித்துக்கொள்வீர்களெனும் உறுதியோடு தங்களுக்கும் தங்கள் சீமாட்டியாருக்கும் எல்லா நற்பேறுகளும் இன்பவாழ்வுகளும் உண்டாகுமாறு வேண்டிக்கொண்டு இவ்வுரையை முடித்துக்கொள்வதுடன், என்னைப் போன்றிய வண்ணம் அவர்களுடையவும் வில்லிங்டன் சீமாட்டி அவர்களுடையவும் உடல்நலனைக் கருதி எழுந்து நின்று பானோபசாரம் பண்ணும்படி சபையோர்களைக் கேட்டுக்கொள்கிறேன்."

25. அப்பொழுது பாண்டுகோஷ்டியார் பிரிட்டிஷ் தேசீய கீதத்தின் முதல் ஆறுபாதங்களை வாசித்தனர்.

26. அதன் பின்னர் வைஸ்ராயவர்கள் மஹாராஜா திருவுளத்தின் உடல்நலனை வாழ்த்திப் பின்வருமாறு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்:—

மாட்சிமை தங்கும் மஹாராஜா அவர்களே, சீமாட்டிகளே, சீமான்களே.

என்னையும் என் மனைவியாரையும் தங்கள் ஸம்ஸ்தானத்திற்கு வரவேற்குமுறையில் கூறிய அன்பு மொழிகட்கும், சென்ற ஆண்டுகளில் கழிபட்டிருக்க எங்கட்கு வாய்த்திருந்த பொறுமை வழியங்களைப் பற்றித் திருவுளங்கொண்டு உதாரமான மனப்பான்மையுடன் இயம்பியவற்றிற்குமாக என் நன்றியைப் பெருமையுடன் தெரிவிக்கின்றேன். எனது இல்வாளின் முயற்சிகளைப்பற்றித் தாங்கள் மொழிந்த அனைத்தையும் முற்றிலும் மனமார ஒப்புக்கொள்கிறேன்; என்னைப்பொறுத்தமட்டிலோவெனில், பிரிட்டிஷ் ராஜ்ஜியத்தின் பற்பல இடங்களில் பலருடைய நிலைமைகளைக் கட்டையும் பெற எனக்கு இயன்றிருக்கும் அனேகமருடங்களை எனது மன்னர்பிரானின் பொருட்டுப் பொறுமை சேவை புரிய எனக்கு வாய்த்திருக்கும் சந்தர்ப்பங்களாக யான் நன்றியுடையவனாகவே இருந்திருக்கிறேன் என்று மட்டும் எனக்குக் கூற இயலும்

"தம்மை அறியும் அனைவராலும் நேசிக்கப்பெற்றவரும் மதிக்கப்பெற்றவரும் இந்த ஸம்ஸ்தானத்தை நெடுங்காலம் ஆண்டு வந்திருப்பவருமான தங்கள் முன்னோராகிய விண்ணுலகெய்திய மஹாராஜா திருவுளத்தின் காலத்தில் அனைவரது விருந்தினர்களாக நாங்கள் கண்டு வரசேர்ந்த தருணங்கள் இவ்வருகை மூலமாக எங்கள் நினைவுக்கு வருகின்றன.

"தங்களது இப்பெருக் பதவியின் கடமைகளையும் பொறுப்புக்களையும் அண்மையில் மட்டுமே மேற்கொண்டிருக்கும் திருவுளத்தின் விருந்தினர்களாக இருப்பதற்கான உரிமை எங்களுக்கு இத்தற்போது கிடைத்துள்ளது. தங்களது அன்னையாராகிய திருமேனியின் கவனம் நிறைந்த ஆதரவையில் தாங்கள் பருவவயதுவடைந்துள்ளதை யான்பார்த்திருக்கிறேன். தங்களுடைய குடிகளின் முன்னேற்றத்தையும் மேம்பாட்டையும் விருத்தியையும் குறித்து தங்கள் விருப்பத்தில் தாங்கள் காட்டுகின்ற செலுத்தியுள்ள அக்கறையையும் ஊக்கத்தையும் குறித்து யான் தங்களைப் பெரிதும் பாராட்டுகிறேன்.

"இந்திய அரசாங்கக் கேந்திரத்திலிருந்து திருவிதாங்கூருக்கு நிலநால்பற்றியுள்ள சேய்மையைக் குறிப்பிடக் கருதி "மலை தூரஸ்த" என்ற சரித்திரசம்பந்தமான பழமொழியைச் சொற்பொழிவினூடே இன்றைய மாலைப் பொழுதில் தாங்கள் எடுத்துக்கூறியிருக்கிறீர்கள். வெகுநாள் இலதான பிறநாட்டுமுறையில் இச்சொற்றொடர் திருவனந்தபுரத்தைக் குறித்தமட்டில் சிறப்பாகப் பொருந்தியுள்ளதென்பது மறுக்கற்பாலதன்று. செய்மைபற்றிய இடையூறுகள் பெரும்பாலும் ஆகாயவிமானப்போக்குவரத்தின் முன்னேற்ற மூலமாக விரைவில் குறைந்துகொண்டே வருகின்றனவாயினும், அரசாங்க இருப்பிடத்திலிருந்து திருவிதாங்கூருக்குள்ள தூரமானது தனிப்பட்ட அதனையொட்டிய சம்பந்தங்கட்குக் காரியார்த்தத்தில் இப்பொழுது ஒரு தடையாயிருக்கிறதென்பதை ஒப்புக்கொள்ளவேண்டுமென யான் நினைக்கிறேன். ஆனால் இவ்விஷயத்தில் நம்பிக்கையும் நல்லெண்ணமும் பற்றிய பரஸ்பர பிணைப்புக்கள் வெறும் பௌதிக தூரத்தை அழித்துவிடுமெனத் திருவுளங்கொண்டு வெளியிட்டிருக்கும் கொள்கையை யான் மனமார ஏற்றுக்கொள்கிறேன்.

"வெளிநாட்டிய மன்னர் சக்ரவர்த்தி திருவுளத்தின்பால் கொண்டிருக்கும் பக்தியையும் பற்றுதலையும் குறித்துத் தாங்கள் வெளியிட்டிருக்கும் மொழிகளை யான் மிக்க மகிழ்ச்சியோடு கேட்டுக்கொண்டிருந்தேன். திருவிதாங்கூர் அரசகுடும்பத்தின் அரசபற்று உலகப்பிரசித்திபெற்றதென்றும், அதனை யான் மொழிகளால் சிறப்பித்துக் கூறவேண்டியதில்லையென்றும் திருவிதாங்கூர் மன்னர்குலத்தோடு நெடுங்காலமாக எனக்குள்ள பழக்கத்தினால் எனக்கு உறுதியாய்க்கூற முடியும்; ஆனால் நமது அன்பு மிக்க மன்னர்பிரானேடும் அவர்களது வாழ்க்கைத் துணைவியாரோடும் தங்களுக்கு அண்மையில் நெருக்கமாக ஏற்பட்டிருக்கும் பிணைப்பானது, திருவிதாங்கூர் பிரிட்டிஷ் அரியாசனத்தின்பால் எக்காலமும் காட்டிவந்திருக்கும் பரம்பரையான இராஜபக்திக்கு ஒளியும் உயிரும் கொடுத்திருக்கிறதென்னும் உண்மையை அறிந்து யான் மகிழ்வுறுகின்றேன்.

"தங்கள் ஆட்சியின் முதல் இரண்டு வருடங்களில் தாங்கள் நடைபெற்றிருக்கும் தங்கள் ஸம்ஸ்தானத்தையொட்டிய பல முயற்சிகள் பற்றித் தாங்கள் கூறக்கேட்பது எனக்கு மிகவும் இன்பமாயிருந்தது. ஸம்ஸ்தானத்தின் பரிபாலனத்தில் உழைக்கும் பொருட்டுத் தங்கள் பிரஜைகளின் எல்லா வகுப்பினர்கட்கும் சம உரிமை தரும் வாய்ப்புப்படி செய்வதற்காக ஒரு பப்ளிக் ஸர்வீஸ் கமிஷனை நியமிக்கும் தீர்மானத்தைக் குறித்து யான் முதன் முதலாகத் தங்களை மனமாரப் பாராட்டுகின்றேன். இந்த நடப்படிக்கை ஆராய்ச்சியோடும் ராஜதந்திர நிபுணத்துவத்தோடும் கூடின ஒன்றென யான் கருதுகின்றேன் என்று ஐயமறக் கூறுவேன். ஒரு பழமைக்கொள்கையும் பழைய முறைமையும் நீங்கிப் புதியதோர் முறை வருகின்றமைக்கு அது எப்படியும் எதிர்த்தாக்கல் இந்தியாவில் மட்டுமன்று, உலகெங்குமுள்ள புதிய ஆட்சிகளைப் போன்றே, திருவிதாங்கூரும் அனுபவிக்கின்றது. பொதுக்காரியங்களில் இதுவரையில் சிலர் மட்டும் பங்குகொண்டிருக்கும் முறை இருந்ததார், அவர்கள் எத்துணை பயிற்சியோடு வாழ்ந்திருந்தபோதிலும், தற்போது ஆட்சி நிர்வாகம் பற்றியும் சமுதாயம் பற்றியுமுள்ள முயற்சிகளில் பங்கெடுக்கும் அதிகப் பேருக்கு வேண்டுமென்று அவாவுடையவர்களாயிருக்கின்றனர். ஆனால், திட்டமாயும் சாந்தமாயும் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் தங்கள் அறிக்கையானது, தங்கள் பிரஜைகளின் சில பிரிவினருக்குள் இதுபற்றி ஏற்பட்டிருக்கும் யாதொரு தப்பெண்ணத்தையும் அகற்றிவிடப் பெரிதும் உதவுமென யான் நம்புகின்றேன்; மேலும் ஸம்ஸ்தானம் முழுதும் சாதுர்ய சமத்துவத்தை வளர்ப்பதற்கான தங்களது சிறந்த முயற்சியில் எல்லாச் சமுதாயத்தினர்களும் வகுப்பினர்களும் ஐயப்பாட்டையும் அவநம்பிக்கையையும் ஒழித்துத் தங்களுடன் ஒத்துழைப்பதற்கான தேவையை வற்புறுத்த இத்தருணத்தைப் பயன்படுத்திக்கொள்ள யான் விரும்புகிறேன். அரசியல் பற்றியும் சமுதாயம் பற்றியுமுள்ள முற்போக்கானது மெல்ல மெல்ல வளர்ந்து வரவேண்டும் என்பதையும், ஆங்கிலப் பிடித்த அமைப்புகளாகப் படிப்படியாய் வளர்ந்து வந்திருக்கும் ஒழுங்குமுறைகளைத் திடீரென்று மாற்றவேண்டுமென்னும் நோக்கத்துடன் இன்று அதிகமாகச் செய்யப்படும் மாற்றங்கள் மேலுமான அவ்வளர்ச்சியைத் தடைபண்ணமட்டுமே செய்யுமென்பதையும், அண்மையில் நிகழ்ந்த அரசியல் அமைப்பு பற்றிய மாறுதல்களில் பங்குகொள்ளாமல் விலகியிருக்குமாறு தங்கள் குடிகளில் யாவர் கெடுமதி கூறப்பெற்றிருக்கின்றார்களோ அவர்கள் அறிந்திருத்தல்வேண்டும்.

"தமது பல்கலைக் கழகங்களிலிருந்தும் கல்லூரிகளிலிருந்தும் இக்காலத்தில் தேர்ச்சிபெற்றுவரும் ஏராளமான வாலிபர்களுக்குத் தகுந்த தொழில் ஏற்படுத்திக்கொடுப்பதன் வருத்தத்தை யான் முற்றிலும் அறிவேன்; பொதுக்கல்வியின் அளவு இத்துணை உயர்ந்திருக்கும் திருவிதாங்கூரைப் போன்ற இப்பிரதேசங்களில் இத்துணை முழுமையில்லையென்று ஏற்படக்கூடும். ஆகவே தங்கள் சொற்பொழிவில் குறிப்பிட்டிருக்குந் தவாறு, கைத்தொழில் முன்னேற்றம் பற்றிய நயம் மூலமாக இப்பிரச்சினையின் முடிவுக்கு உதவிசெய்ய வேண்டிய தேவையைத் தாங்கள் முற்றிலும் உணர்ந்திருப்பதைக் குறித்து யான் சிறப்பாக மகிழ்ச்சியுறுகின்றேன்.

"தாங்கள் அமைத்திருக்கும் சட்டசபை கூடுவதற்கான ஒரு கட்டடத்திற்கு அஸ்திவாரக்கல் நாட்டும்படி என்னுடைய வருகையின்போது என்னிடம் கேட்டுக்கொள்ளத் தாங்கள் எண்ணமிருப்பதாக யான் அறிகின்றேன். அரசியல் அமைப்பு பற்றிய சீர்திருத்தங்கள் செய்யும் காரியத்தில் திருவிதாங்கூர் என்றுமே முன்னணியிலேயே நின்றுளது; தங்கள் ஆட்சியில் தங்களுடைய ஜனங்கள் முன்னிலும் அதிகமாக ஈடுபட்டிருக்கும்படி செய்வதற்கான தங்கள் முயற்சிகளை யான் அக்கறையோடும் அனுதாபத்தோடும் கவனித்துக்கொள்கின்றேன்.

"இறுதியாக, தங்களுடைய பளுவான பொறுப்புக்களைத் தாங்கள் ஆண்மையோடும் ஆர்வத்தோடும் நிறைவேற்றும் முறையைக் குறித்து இன்னும் ஒருமுறை தங்களைப் பாராட்டுகின்றேன். சென்ற இரண்டு ஆண்டுகளாகவே தாங்கள் ஆட்சி அதிகாரத்தைச் செலுத்திவந்திருக்கின்றீர்களென்பது உண்மையே; ஆனால் தாங்கள் நிறைவேற்றியுள்ள காரியங்களும் நிர்வாகத்துறைகளைத் தாங்கள் வகுத்திருக்கும் காரியத்திட்டமும் பல ஆண்டுகளை அரசுபுரிந்து பழக்கம்பெற்ற ஓர் அரசருக்குரிய தகுதியுள்ளனவையாகும். திருவிதாங்கூர் ஸம்ஸ்தானமானது, மேன்மேலும் பெருகிவரும் தன்னாட்டு முன்னேற்றம் அடையுமென்றும், பிற்காலத்தில் இம்மஹாராஜ்யத்தின் காரியங்களை நடத்திவருபவரும் ஸம்ஸ்தானங்களுடையவும் மாகாணங்களுடையவும் பெரிய சமஷ்டியில் தன் பதவிக்கேற்ற பங்கை நிர்வகிக்கும் ஓர் எதிர்காலத்தை யான் ஆசையுடன் எதிர்பார்க்கின்றேன்.

"சீமாட்டிகளே, சீமான்களே, மாட்சிமைதங்கிய மஹாராஜா திருவுளத்திற்கு உடல் நலமும் இனிய வாழ்வும் நற்பேறும் உண்டாகுமாறு வேண்டிக்கொண்டு என்னுடன் எழுந்துநின்று பானம்செய்யும்படி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்."

27. அப்பொழுது பாண்டுகாரர் திருவிதாங்கூர் தேசிய கீதத்தின் முதல் ஆறு பாதங்களை வாசித்தார்கள்.

28. இந்த பாஷோபசாரங்கள் வெகு ஆர்வத்தோடும் அபிமானத்தோடும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. விருந்து முடிந்ததும் வைஸ்ராய் தம்பதிகள் மஹாராஜா திருவனந்தபுரம் சென்று கதகளியைப் பார்த்து "கல்யாண சௌகந்திகம்" (பீமசேனன் ஒரு புஷ்பத்தைத் தேடிச் சென்றது) என்ற கதையின் நடிப்பைக் கண்டனர்; இந்தக் கதகளி பெரிதும் பாராட்டப்பட்டது.

29. கதகளியைத் தொடர்ந்து வாணவேடிக்கைகள் நடந்தன; இந்த வாணவேடிக்கையை வைஸ்ராய் தம்பதிகள் தாங்கள் இதுகாறும் கண்டிருக்கும் மிகச்சிறந்த வாணவேடிக்கைகளில் ஒன்றெனக் கருதினார்கள்.

30. டிஸெம்பர் மாதம் 11-ஆம் தேதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு 31 ஆசார வெடிகள் வைக்கப்பட்டன.

31. முற்பகல் 9-30 மணிக்கு மேன்மை பொருந்திய வைஸ்ராயவர்கள் சீமாட்டியாருடன் திருவனந்தபுரம் வாட்டர் வர்க்ஸை (தண்ணீர் வசதி வேலைகளை) பார்வையிட்டுத் திறந்து வைத்தார்கள். வாட்டர் வர்க்ஸின் சுற்றுப்புறங்கள் அத்தருணத்துக்கேற்றவாறு அலங்கரிக்கப்பெற்றிருந்தன. சிறப்புத்தேர்ந்தும் விருந்தினர்களை வரவேற்பதற்காக ஒரு பிரத்தியேக பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. படிக்கட்டின் கீழே வைஸ்ராய் தம்பதிகளை மஹாராஜா திருவனந்தபுரம் சென்று இளைய தலைவர்களின் முன்னிலையில் திவான் முதலியவர்களோடு வரவேற்று பக்கவிலுள்ள மேடைக்கு அழைத்துச் சென்றனர். சீப் எஞ்ஜினியர் வைஸ்ராய் தம்பதிகளுக்கு வாட்டர் வர்க்ஸ் எஞ்ஜினியர் மஹாராஜா திருவனந்தபுரம் முறையே மாலை அணிந்தார்கள். மஹாராஜா திருவனந்தபுரம் ஸெக்ரடேரியட்டின் மேல் வைஸ்ராயவர்கள், (பந்தலுக்கு வெளியிலுள்ள கீர்த்தம் ஊற்றுக்குழாயையும் நீர்ப்பீடும் மற்றும் உண்டான சூத்திரத்தையும் அடக்கிக்கொண்டிருந்த) அடைப்பை திறவுகோலையும் வால்வு என்னும் அடைப்பின் சக்கரத்தையும் திருகி, வாட்டர் வர்க்ஸைத் திறந்திருப்பதாக அறிவித்தார்கள். பிறகு வைஸ்ராயவர்கள் இந்தத் திட்டத்தின் நன்மையைப் பாராட்டிப் பேசி, இந்த ஸம்ஸ்தானத்தின் பிரஜைகள் தங்கள் அரசர் மூலமாக இந்த சுகாதார வசதியையும் சுகாதாரத்தையும் பெற்றுக்கொண்டிருப்பார்களென்று தாம் நம்புவதாகக் கூறி முடித்தார்கள். வாட்டர் வர்க்ஸிற்குத் தமது பெயரை இட வைஸ்ராயவர்கள் அநுமதி அளித்தனர். அதன்பின்னர் சீப் எஞ்ஜினியர் வைஸ்ராய் தம்பதிகளுக்கும் வாட்டர் வர்க்ஸ் எஞ்ஜினியர் மஹாராஜா திருவனந்தபுரம் சிறியர்களும் கூறினார்கள். பிறகு வைஸ்ராய் தம்பதிகளும் மஹாராஜாவும் அவர்களும் பில்டர் ஹௌஸிற்குச் சென்று அதைப் பார்வையிட்டபின் வாட்டர் வர்க்ஸை விட்டுப் புறப்பட்டனர்; வைஸ்ராயவர்கள் விருந்தினர் மன்றத்திற்குத் திரும்பினார்கள்; அவர்களின் சீமாட்டியார் குழந்தைப் பாதுகாப்பு நிலையத்திற்குச் சென்றார்கள்.

32. வில்லிங்டன் சீமாட்டியார் முதலாவதாகக் குழந்தைகள் ஓய்வு பெறும் இடமாகிய குழந்தைப் பாதுகாப்பு நிலையத்தைப் பார்வையிட்டார்கள். சீமாட்டி அவர்களை மகளிர் சங்கத்தார் வரவேற்று உபசரித்துக் காண்பித்தனர். பிறகு சீமாட்டி அவர்கள் மகளிர் ஆஸ்பத்திரிக்கு, கன்னிமேரி கொத்தளத்திலும் மற்ற கட்டடங்களிலும் முறையே திருவனந்தபுரம் சமூகசேவையாளர்கள் நடத்தப்பட்டுவரும் குழந்தைப் பாதுகாப்பு நிலையங்களுக்குச் சென்றார்கள். அங்கிருந்து சீமாட்டியவர்கள் ஸ்திரீகளுக்கும் குழந்தைகளுக்குமான ஆஸ்பத்திரிக்குச் சென்றார்கள்; அங்கு டாக்டர் பின்ஹே முதலியோர் அவர்களை வரவேற்றுச் சுற்றிலும் காண்பித்தார்கள். பிறகு சீமாட்டியார் விருந்தினர் மன்றத்திற்குத் திரும்பினார்.

33. மஹாராஜா திருவனந்தபுரம் முற்பகல் 10-30 மணிக்கு விருந்தினர் மன்றத்தில் வைஸ்ராயவர்களை இராஜரீக முறைப்படி பேட்டி கண்டார்கள். மிலிடரி ஸெக்ரடேரியும் ஒரு எயிடிகாங்கும் அடங்கிய ஒரு பிரதிநிதி கோஷ்டியினர் வைஸ்ராயின் வாசஸ்தலத்திலிருந்து மஹாராஜா திருவனந்தபுரத்திற்குத் துணைவரும் பொருட்டு முற்பகல் 10-20 மணிக்கு விருந்தினர் மன்றத்திலிருந்து புறப்பட்டார்கள். அந்தக் கோஷ்டியினரை தலைவர் பிரதிநிதிகளின் எதிரில் அரண்மனையில் வரவேற்றனர். பிறகு மஹாராஜா திருவனந்தபுரம் தலைவர் ஜெனரலைச் சேர்ந்த மிலிடரி ஸெக்ரடேரியும் ஒரு எயிடிகாங்கும் விருந்தினர் மன்றத்திற்குப் புறப்பட்டார்கள். திவான், சர்வாதிகாரியும் அரசியல் அமைப்புச் சம்பந்தமாயுள்ள டெபுடேஷன், சிப்ஜஸ்டிஸ், நாயர் பட்டாளம் கமாண்டிங், கிவர்ணருமான ரங்கிநார், கவர்ன்மெண்ட் சீப் ஸெக்ரடேரி, போலீஸ் கமிஷனர், கார்யதிகாரியக்காரர், ஒரு எயிடிகாங் ஆகியவர்கள் மஹாராஜா திருவனந்தபுரத்துடன் சென்றார்கள். காரிலிருந்து இறங்கியதும் மஹாராஜா திருவனந்தபுரத்தை வைஸ்ராயவர்களின் பிரைவேட் ஸெக்ரடேரியும் ஒரு எயிடிகாங்கும் எதிர்கொண்டு, பிரதிநிதி கோஷ்டியாருடன் திருவனந்தபுரத்தைப் படிக்கட்டின் மீது அழைத்துச் சென்றனர். பிறகு படிக்கட்டின் மீது திருவனந்தபுரத்தைப் பொலிடிக்கல் ஸெக்ரடேரி வரவேற்று வரவேற்பு அறைக்கு அழைத்துச் சென்றார். வரவேற்பு அறைக்குள் அதன் வாசலிலிருந்து இருப்பிடத்திற்குள்ள தூரத்தின் முக்கால்பங்கு தூரத்திலிருந்து மஹாராஜா திருவனந்தபுரத்தை வைஸ்

ராயவர்கள் வரவேற்று வைஸ்ராயவர்களின் வலதுபக்கத்திலுள்ள ஓர் ஆசனத்திற்கு அழைத்துச் சென்று அமரச்செய்தனர். திருவுளத்தின் வலதுபக்கத்தில் கவர்னர் ஜெனரலவர்களின் ஏஜெண்டுக் அவருக்கப்பால் திவானும் திருவுளத்துடன் வந்த மற்ற உத்தியோகஸ்தர்கள் அவரவர்களுடைய அந்தஸ்தை யனுசரித்தும் அமர்ந்திருந்தனர். கவர்னர்ஜெனரலவர்களின் ஏஜெண்டினுடைய இந்தியன் அஸிஸ்டெண்ட் கவர்னர் ஜெனரலவர்களின் ஏஜெண்டுக்குப்பின்னால் அமர்ந்திருந்தார். வைஸ்ராயவர்களின் இடதுபக்கத்தில் பொலிடிகல் செக்ரெட்டரியும் மிலிடரி செக்ரெட்டரியும் வைஸ்ராயவர்களின் சொந்தச் சிப்பந்திகளும் அமர்ந்திருந்தனர். சற்று நேரம் உரையாடியபின்னர், திருவுளத்துடன் வந்திருந்த திவானும் மற்ற உத்தியோகஸ்தர்களும் கவர்னர் ஜெனரலவர்களின் ஏஜெண்டால் அறிமுகஞ்செய்து வைக்கப்பட்டனர். இந்தியன் உத்தியோகஸ்தர்கள் ஒவ்வொருவரும் ஒரு சுவர்ண மோஹரவுள்ள ஒரு நாஸர் அளித்தனர்; அது தொடப்பட்டுத் திரும்பச் செலுத்தப்பெற்றது. பேட்டிகண்டு முடிந்ததும் வைஸ்ராயவர்கள் மஹாராஜா திருவுளத்திற்கு மாலை அணிந்து, அத்தரும் பானும் வழங்கினார்கள். வைஸ்ராயவர்களின் சொந்தச் சிப்பந்தியைச் சேர்ந்த ஒரு உத்தியோகஸ்தர் திவானுக்கும் திருவுளத்தின் பரிவாரத்தைச் சேர்ந்த ஏனையோர்களுக்கும் அத்தரும் பானும் கொடுத்தார். மஹாராஜா திருவுளங்கொண்டு அங்கிருந்து புறப்படும் பொழுது நடந்த சடங்குகள் திருவுளங்கொண்டு வந்திறங்கிய பொழுது நடந்தவைகளைப் போன்றனவே. பேட்டிமுடியும்வரை காயர்பட்டாளம் பாண்ட் வாசித்துக்கொண்டிருந்தது.

34. விருந்தினர் மன்றத்தின் முன்பக்கத்தில் மஹாராஜா திருவுளத்தின் நாயர்பட்டாளத்திலிருந்து ஒரு கார்ட் ஆப் ஆனர் அணிவகுத்து நின்று, திருவுளங்கொண்டு வரும்பொழுதும் போகும்பொழுதும் ஆசாரம் செய்தனர். மஹாராஜா திருவுளங்கொண்டு வந்து சேர்ந்தபொழுதும் புறப்பட்டுச் சென்றபொழுதும் 19 பீரங்கி வெடிகள் வைத்து ஆசாரம் செய்யப்பட்டது.

35. முற்பகல் 11-30 மணிக்கு வைஸ்ராயவர்கள் கவடியார் அரண்மனையில் மஹாராஜா திருவுளத்தை இராஜரீக முறைப்படி திருப்பி பேட்டி கண்டார்கள்.

36. திவானும், சட்டசம்பந்தமாயும் அரசியலமைப்பு சம்பந்தமாயுமுள்ள உபதேசகரும், சீப் ஜஸ்டிஸும், நாயர் பட்டாளம் கமண்டான்டும் அடங்கிய ஒரு பிரதிநிதி கோஷ்டியினர் வைஸ்ராயவர்களை மஹாராஜா திருவுளத்தின் அரண்மனைக்கு அழைத்துக்கொண்டுவரும்பொருட்டு முற்பகல் 11-15 மணிக்கு விருந்தினர் மன்றத்தில் வைஸ்ராயவர்களை எதிர்கொண்டழைக்கச் சென்றிருந்தனர். 31 பீரங்கி வெடிகளின் ஒருராஜரீக ஆசாரத்தின்மேல் வைஸ்ராயவர்கள் விருந்தினர் மன்றத்திலிருந்து 11-25 மணிக்குப்புறப்பட்டார்கள். வைஸ்ராயவர்களுடன் பொலிடிகல் செக்ரெட்டரியும் ப்ரைவேட் செக்ரெட்டரியும் மிலிடரி செக்ரெட்டரியும் வைஸ்ராயவர்களின் சொந்தச் சிப்பந்தியில் மீதியுள்ளவர்களும் சென்றார்கள்.

37. அரண்மனையில் வைஸ்ராயவர்கள் தமது மோட்டாரிலிருந்து இறங்கியதும் திருவுளங்கொண்டு கவர்னர் ஜெனரலவர்களின் ஏஜெண்டோடுகூட சென்று வைஸ்ராயவர்களை வரவேற்று, வரவேற்பு அறையில் திருவுளத்தின் வலதுபக்கத்திலுள்ள ஓர் ஆசனத்திற்கு அழைத்துச் சென்றார்கள். வைஸ்ராயவர்களின் வலது பக்கத்தில்பொலிடிகல் செக்ரெட்டரியும் ப்ரைவேட் செக்ரெட்டரியும் மிலிடரி செக்ரெட்டரியும் வைஸ்ராயவர்களின் சொந்தச் சிப்பந்தியில் மீதியுள்ளவர்களும் அமர்ந்திருந்தனர். திருவுளத்தின் இடதுபக்கத்தில் கவர்னர் ஜெனரலவர்களின் ஏஜெண்டும் அவருக்கப்பால் திவானும் திருவுளத்தின் பரிவாரத்தைச் சேர்ந்த ஏனைய உத்தியோகஸ்தர்கள் அவரவர்களுடைய அந்தஸ்தை யனுசரித்தும் அமர்ந்திருந்தனர். கவர்னர் ஜெனரலவர்களின் ஏஜெண்டினுடைய இந்தியன் அஸிஸ்டெண்ட் கவர்னர் ஜெனரலவர்களின் ஏஜெண்டுக்குப்பின்னால் அமர்ந்திருந்தார். சற்றுநேரம் உரையாடியபின், மஹாராஜா திருவுளத்தின் பரிவாரத்தைச் சேர்ந்த அங்கத்தினர்கள் கவர்னர் ஜெனரலவர்களின் ஏஜெண்டால் வைஸ்ராயவர்களுக்கு அறிமுகஞ்செய்து வைக்கப்பட்டனர்; இந்திய உத்தியோகஸ்தர்கள் ஒவ்வொருவரும் ஒரு சுவர்ண மோஹரா அளித்தார்கள்; அது தொடப்பட்டுத் திரும்பச் செலுத்தப்பட்டது. பேட்டியின் முடிவில் மஹாராஜா திருவுளங்கொண்டு வைஸ்ராயவர்களுக்கு மாலை அணிந்து அத்தரும் பானும் வழங்கினார்கள். பொலிடிகல் செக்ரெட்டரிக்கும் கவர்னர்ஜெனரலவர்களின் ஏஜெண்டுக்கும் திருவுளங்கொண்டு மாலை அணிந்து அத்தரும் பானும் வழங்கினார்கள். அஜுராயிருந்த ஏனைய ப்ரிடிஷ் உத்தியோகஸ்தர்களின் விஷயத்தில் திவானவர்கள் அதே சடங்கை நடத்தினார்கள். வைஸ்ராயவர்கள் வந்துசேர்ந்தபொழுது நடத்தப்பட்ட சடங்குகள் அவர்கள் திரும்பப் புறப்படும்போதும் நடத்தப்பட்டன.

38. மஹாராஜா திருவுளத்தின் அரண்மனையின் கார்ட் ஆப் ஆனர் ஒன்று அணிவகுத்து நின்று வைஸ்ராயவர்கள் வரும்பொழுதும் திரும்பச் செல்லும்பொழுதும் ஆசாரம் செய்தார்கள்.

39. காயர் பட்டாளம் பாண்டு பேட்டி சமயத்தில் வாசித்துக்கொண்டிருந்தது.

40. வைஸ்ராயவர்கள் புறப்பட்டதும் 31 பீரங்கி வெடிகள் வைத்து மரியாதை செய்யப்பட்டது.

41. வைஸ்ராயவர்கள் விருந்தினர் மன்றத்திற்குத் தம்முடன் பிரதிநிதிக் கோஷ்டியினர் வருவதைத் தவிர்க்கவேண்டாமென்று வைத்தார்கள்.

42. பிற்பகல் 12-30 மணிக்கு வைஸ்ராயவர்கள் திருவிதாங்கூர் திவானுக்கும் வில்லிங்டன் சீமாட்டியார் பின்னே ஆன்டனுக்கும் பேட்டி அளித்தனர்.

43. வைஸ்ராய் தம்பதிகள் பிற்பகல் 1 மணிக்குச் சிற்றுண்டி அருந்தினர்; அதற்குச் சில உத்தியோகஸ்தர்களும் சீமாட்டிகளும் சீமான்களும் அழைக்கப்பெற்றிருந்தனர்.

44. வைஸ்ராயவர்களின் மனைவியார் மாலை 4-7 மணிக்கு ஒய். டபிளியு. ஸி. ஏ. என்னும் இளம் மாதர் சங்கத்திற்கு விஜயம் செய்தார்கள். மிஸ் ஆஸ்டின் சங்கத்தின் தலைவி ராணி லக்ஷ்மி பூவா தம்பிராட்டி, மிஸ் ப்ராண்ட் முதலியோர் வில்லிங்டன் சீமாட்டியாரை எதிர்கொண்டு வரவேற்றனர். சீமாட்டியவர்கள் சங்கத்தின் கட்டிடத்தைப் பார்வையிட்டபின் ஹூமிலியர்ஸ் ஆப் ஹார்ட் என்னும் ஆணை வழியாக ஹோஸ்டலுக்குச் சென்றார்கள்; அங்கு உட்புகும் அறையில் சங்கத்தின் டைரக்டரான மெஸ்மெர்ஸ் கே. சாரதா கே. பி. ராமசாமி சீமாட்டியாரை வரவேற்றனர். பிற்பாடு சீமாட்டியார் ஹோஸ்டலைப் பார்வையிட்டு மாணவிகளைச் சந்தித்தார்கள்; இவர்கள் அன்னவருக்கு மாலை அணிந்தார்கள். ஹோஸ்டலைப் பார்வையிட்டபிறகு சீமாட்டியார் டென்னிஸ் மைதானம் இடத்திற்குச் சென்றனர்; அங்கு அன்னவரை வரவேற்பதற்காகச் சங்கத்தின் அங்கத்தினர்கள் கூடியிருந்தனர். ஒரு வரவேற்புப் பாட்டுப்பாடிய பின்னர் தலைவர் ஒரு வரவேற்புப் பத்திரம் படித்து அதைச் சட்டையிலும் தந்தத்திலும் செய்யப்பட்ட ஒரு சிமிழில் அடக்கஞ்செய்து சீமாட்டியாருக்கு அளித்தார். சீமாட்டியார் பதிலுரைக்கு முகத்தான் ஒரு பிரசங்கம் செய்தார். முடிவில் வைஸ்ராயவர்கள் வந்துசேர்ந்து சில பிரசங்கம் செய்து அங்கத்தினர்களை ஆசிர்வதித்தார்கள். பிற்பாடு வைஸ்ராய் தம்பதிகள் மாலை 4-45 மணிக்குக் காதிசேதி கவுடியார் அரண்மனைக்குச் சென்றார்கள்.

45. மாலை 5 மணிக்குக் கவுடியார் அரண்மனையில் ஒரு தோட்டவிருந்து நடைபெற்றது. சட்டநிர்மாண சபையின் மெம்பர்கள், திருவனந்தபுரம் நகரிலுள்ள சபைகளின் தலைவர்கள், பிரதான கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள், பென்ஷன்பெற்ற கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள், பிரபல சங்கங்களின் தலைவர்கள், சமாசாரப் பத்திரிகைகளின் பிரதிநிதிகள், உத்தியோகஸ்தரல்லாத அநேக சீமாட்டிகளும் சீமான்களும் ஆகியோர் அவ்விருந்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர். மஹாராஜா திருவுளமகொண்டு வைஸ்ராய் தம்பதிகளை வரவேற்று பந்தலிலுள்ள தனி இருக்கைகளுக்கு அழைத்துச் சென்றார்கள். பிறகு விருந்தினர்கள் வைஸ்ராய் தம்பதிகளுக்கு அறிமுகம் செய்யவைக்கப்பட்டனர். தேநீர் அருந்தியபிறகு வைஸ்ராய் தம்பதிகள் அத்தருணத்திற்கென ஏற்பாடு செய்யப்பட்டிருந்த டென்னிஸ் பந்தய விளையாட்டைக் கண்டனர். வைஸ்ராயவர்கள் விருந்தினர் கூட்டத்தில் தாராளமாகச் சென்றனர்; திவான் அவ்விருந்தினர்களை அரசப் பிரதிநிதியாருக்கு அறிமுகம் செய்துவைத்தார். இச்சடங்கு நிகழும்வரை நாயர்பட்டாளம் பாண்டு வாசித்துக்கொண்டிருந்தது.

46. வைஸ்ராய் தம்பதிகள் மஹாராஜா திருவுளத்தோடும் ஜூபிலியர் மஹாராணியாரோடும் கோட்டைக்குள் விஜயம் செய்தபின் விருந்தினர் மன்றத்திற்குத் திரும்பினார்கள்.

47. அன்றிரவு வைஸ்ராய் பங்களாவில் ஒரு டின்னர் நடந்தது; மஹாராஜா, ஜூபிலியர் மஹாராணி, கவர்னர் ஜெனரலவர்களின் ஏஜெண்ட் லெப்டினண்ட் கர்னல் டி. எம். பீல், திவான் மிஸ்டர் டி. ஆஸ்டின், மிஸிஸ் ஆஸ்டின், ஸர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யர், காப்டன் வி. ஏஸ்லெட் ஆகியவர்கள் அதற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

48. டின்னருக்குப் பிறகு வைஸ்ராய் தம்பதிகளும் அவர்களின் டின்னர் குழுவினரும் கவுடியார் ஸ்கூல் ஹாலிற்குச் சென்று அமெச்சூர் நாடகசபையைக் கண்டு விருந்தினர் மன்றத்திற்குத் திரும்பினார்கள்.

49. நவெம்பர் மீ 12-உ முற்பகல் 10 மணிக்கு வைஸ்ராயவர்கள் வில்லிங்டன் சீமாட்டியாருடன் திருவிதாங்கூர் புதிய சட்டசபை மன்றத்தின் அஸ்திவாரக்கல் நாட்டுவதற்காகப் புத்தன்கச்சேரி வளவுக்குச் சென்றார்கள். இத்தருணத்தை யொட்டி ஒரு பிரத்யேக பந்தல் அமைக்கப்பெற்றிருந்தது; பந்தலும் சுற்றுப்புறங்களும் எழில்பெற அலங்கரிக்கப்பட்டிருந்தன. வைஸ்ராயவர்களுக்கு ஆசாரம் செய்யும்பொருட்டு பந்தலின் முகமண்டபத்திற்குமுன் பக்கத்தில் கார்ட் ஆப் ஆனர் என்னும் ஒரு பட்டாளப் பிரிவினர் அணிவகுத்து நின்றனர். முந்தின நாள் தோட்டவிருந்திற்கு அழைக்கப்பட்டிருந்தவர்கள் எல்லாரும் இவ்வைபவத்திற்கும் அழைக்கப்பெற்றிருந்தார்கள். ஜூபிலியர் மஹாராணியாரும் மூத்த இளையராணியாரும் விஜயம் செய்திருந்தனர். அழைக்கப்பெற்றிருந்தவர்கள் முற்பகல் 9-30 மணிக்கு வந்து தங்கள் இருக்கைகளில் அமர்ந்தனர். மஹாராஜா திருவுளமகொண்டு கவர்னர் ஜெனரலவர்களின் ஏஜெண்டும் திவானும் வைஸ்ராய் தம்பதிகளை வரவேற்று

கள். பிற்பாடு டான்ஸ் வாசித்துக்கொண்டிருந்தவர்கள் ப்ரிடிஷ் தேசியகீதம் வாசித்தார்கள்; கார்ட் ஆப் ஆனர் என்னும் பட்டாளப் பிரிவினர் ஆசாரம் செய்தனர். மஹாராஜா திருவுளங்கொண்டு வைஸ்ராய் தம்பதிகளை மேடைமீதுள்ள பிரத்தியேக ஆசனங்களுக்கு அழைத்துச்சென்றார்கள். சீப் என்ஜினியர் வைஸ்ராய் தம்பதிகளுக்கும் திருவனந்தபுரம் டிவிஷன் எக்ஸிக்யூடிவ் என்ஜினியர் மஹாராஜா திருவுளத்திற்கும் முறையே மாலை அணிந்தனர். மஹாராஜா திருவுளங்கொண்டு திருவிதாங்கூர் புதிய சட்டசபை மன்றத்தின் அஸ்திவாரக் கல்லை நாட்டும்படி வைஸ்ராயவர்களை கேட்டுக்கொண்டு பின்வருமாறு சொற்பெருக்கு நிகழ்த்தினார்கள்:—

மேன்மை பொருந்திய பிரபு அவர்களே,

"புதிய சட்டநிர்மாண மன்றத்திற்கு அஸ்திவாரக்கல் நாட்டத் தாங்கள் ஒப்புக்கொண்டது எனக்கு மிக்க மகிழ்ச்சி தருவதாயிருக்கிறது. இவ்விழாவில் தாங்கள் பங்கு கொள்வது பிரத்தியேகமான பொருத்தமுடையதாயிருக்கும்; ஏனெனில் தாங்கள் ஹௌஸ் ஆப் லார்ட்ஸ் என்னும் பிரபுக்கள் சபையிலும் ஹௌஸ் ஆப் காமன்ஸ் என்னும்பொது மக்கள் கழகத்திலும் ஒரு சிறந்த அங்கமாயிருந்ததுமல்லாமல், தாங்கள் பொதுமக்கள் கழகத்தின் பிரதான சொற்பொழிவாளர்களில் ஒருவராய் வழிகாட்டுந்தலைவராயிருப்பதால், பாராளுமன்றம் பற்றிய பாரம்பரை தங்கள் இரத்தத்தில் கலந்துள்ளது; என் இராஜ்யத்தின் திருத்தியமைக்கப்பெற்ற சட்டசபைகளுடன் தாங்கள் சம்பந்தப்பட நேர்ந்ததை ஒரு நற்பேறெனவே யான் கருதுகின்றேன்.

"புதிதாக அமைக்கப்பெற்ற திருவிதாங்கூர் சட்டசபையாகிய ஸ்ரீமூலம் சபையும் ஸ்ரீசித்திரை ஸம்ஸ்தான சபையும் கூடுவதற்காகவே இப்புதிய கட்டடம் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீமூலம் சபையில் அறுபத்திரண்டு உத்தியோகப்பற்றற்ற அங்கத்தினர்களும் பத்து உத்தியோகஸ்த அங்கத்தினர்களும் அடங்கியுள்ளார்கள்; ஸம்ஸ்தான சபையில் இருபத்தேழு உத்தியோகப்பற்றற்ற அங்கத்தினர்களும் பத்து உத்தியோகஸ்த அங்கத்தினர்களும் இருக்கின்றனர். சபைகளில் மாதர்கட்கும் சிறுபான்மைக்கட்சியினர்கட்கும் பிரதிநிதித்துவம் அளிக்குங்காரியத்தில் மிகக்குறைந்த அளவுக்கு நியமனம் செய்யும் தத்துவத்தை அரசாங்கத்தார் கைக்கொண்டுள்ளார்கள். அதனால் பெரும்பான்மையும் முக்கியமாக உத்தியோகப்பற்றற்றவர்களேயாம். சட்டநிர்மாணம், பொருளாதாரம், அநேகமாக ஆட்சி நிர்வாகம் பற்றிய எல்லாக் காரியங்களைக்குறித்தும் கேள்வி கேட்பது 500 ரூபாய் வரையில் சம்பளமுள்ள உத்தியோகங்களைக் குறித்து வோட் கொடுப்பது, இவையனைத்தும் சட்டசபையின் அதிகாரவரம்பில் உட்படுகின்றன; அவ்வதிகாரங்களுடன் பூர்ணமான பேச்சுச் சுதந்திரமும் இருப்பதனால் அரசாங்கத்தைப்பற்றிய காரியங்களில் ஜனங்களுக்கு ஒரு பெரிய மேல்விசாரணை அதிகாரம் கிடைத்திருக்கிறது.

"இச்சீர்திருத்தமே ஒரு இந்திய ஸம்ஸ்தானத்தின் மக்களுக்கு அரசாங்கத்துடன் கூடிப்பட அளித்திருக்கும் மிகப்பெரிய திட்டம் என்றும், இஃது சமஷ்டிக்கொள்கையை நிறைவேற்றுவதற்கான ஓர் உற்றபடியென்றும் யான் நம்புகிறேன். இப்பிரதிநிதி ஸ்தாபனங்கள், ஒழுங்கானதும் அமைதியானதுமான முன்னேற்றம் ஒவ்வொரு துறையிலும் கைகூடத்தக்கவாறு கடனாற்றுமென்பதும், அறிவும் ஆற்றலும் மிக்கபொதுஜனாபிப்பிராயத்தை அரசாங்கத்திற்குத் தெரிவித்துக்கொண்டிருக்குமென்பதும் இந்நாட்டின் முன்னேற்றத்தில் அக்கறையுடைய ஒவ்வொருவரும் எதிர்பார்க்கின்றனர். வாழ்க்கைத் திட்டத்தையும் சிந்தனை முறையையும் பொதுவாக உயர்த்துவதனாலும், இத்தருணத்தில் செல்வப்பெருக்கைத் தடுத்துக்கொண்டு உலகத்துள்ள எல்லா அரசாங்கங்களையும் ஸம்ஸ்தானங்களையும் இந்த ஸம்ஸ்தானத்தையும் எதிர்த்துநிற்கும் இடையூறுகளைக் கடந்து வருவதனாலும் மட்டுமே, இந்நாட்டின் முன்னேற்றம் கைகூடும்படி செய்யவியலும்; சட்டசபையானது மிக முக்கியமான இப்பிரசினைகளில் கவனஞ் செலுத்தி, அவற்றின் முடிவுகாண்பதில் உண்மையாய் உதவிபுரியுமென யான் நம்புகின்றேன்.

"இக்கட்டடத்தின் அஸ்திவாரக்கல்லை நாட்டுமாறு தங்களை யான் வேண்டிக்கொள்ளுமா"

50. இதற்கு மறுமொழியாக மேன்மைபொருந்திய வைஸ்ராயவர்கள் அடியிற்கண்டவாறு சொற்பொழிவு நிகழ்த்தினார்:—

மாட்சிமை தங்கிய மஹாராஜா அவர்களே, சீமாட்டிகளே, சீமான்களே,

"நாம் இவண் குழுமியிருக்கும் இவ்வினிய விழாவில் முக்கியமான பங்குகொள்ளுதற்கும்: திருவுளத்தின் வேண்டுகோளின்படி திருவிதாங்கூரின் நூதன சட்டசபை கூடுவதற்கான கட்டடத்திற்கு அஸ்திவாரக்கல் நாட்டுவதற்குமாக இன்று அழைக்கப்பட்டிருப்பதைவிட எனக்கு இன்பமளிக்கும் பொருள் ஒருகால் அரிதே. கட்டடங்களின் ப்ளானையொட்டிய மட்டில் யான் ஒரு பெரிய அநுபவசாலியல்லவென்பதை யான் ஒப்புக்கொள்ளவேண்டியிருக்கிறது, ஆனால் இத்தகைய காரியங்களில் ஒருவிதி நடப்பிக்க மிகவும் தகுதியுடைய சீமாட்டி அவர்கள் இப்பொழுது அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கும் கட்ட

தமது ஆட்சியின் முறையை ஒப்புக்கொண்டுள்ளார்களெனக் கேட்பது தங்களுக்கு மகிழ்ச்சியளிக்கக்கூடும். தங்கள் ஸம்ஸ்தானத்தின் ஆட்சி நிர்வாக காரியங்களில் தங்களுடைய ஜனங்கள் முழுவதிலும் அதிகமாகக் கலந்துகொள்வதற்கான தங்களது திட்டத்தில் தங்களுக்குத் தீராத்திருக்கும் மேலான குறிக்கோள்களையும் விருப்பங்களையும் நிறைவேற்ற இவ்விடத்தில் எழும் அமைப்புவாய்ந்த சம்பூர்ணமான சட்டம் பெரிதும் உதவுமென யான் நம்புகிறேனென்று சீமாட்டியவர்களின் திருவுளப்பிராயத்தைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய மிக்க அந்தரங்கத்தோடு கூறியதும்,

“காலங்கள் இக்காலம் இனிமையாக எங்களுக்கு விளைந்திருக்கும். தங்கள் பிரஜைகளுக்கான அரசியல் அமைப்பை ஏற்படுத்த இச்சீர்திருத்தத் திட்டமானது, சில வருடங்களாகச் சக்கரவர்த்தி திருவுளத்தின் அரசாங்கத்தாரும் இந்திய அரசாங்கத்தாரும் விடா முயற்சியோடும் ஆர்வத்தோடும் யோசித்துவரும் இந்தியா முழுவதற்குமுள்ள சுதேச அரசாங்க சீர்திருத்தத் திட்டத்தை எதிர்பார்த்திருக்கிறதென்று அறிந்து யான் இன்புறுகின்றேன். தங்களது ஸம்ஸ்தானம் அநேக முன்னேற்றமடைந்த பரம்பரைகளால் தெளிவாகச் சிறப்பெய்திவருகிறது. தங்கள் அரசாங்கம் கைக்கொள்ளத் தகுந்த நடத்தைகளுக்கும் அதிகப்படியான இம்முன்னேற்றம் திருவிதாங்கூர் மகளிர் விஷயத்திற்கு நன்மை பயக்கக்கூடியதாயிருக்குமென யான் முற்றிலும் நம்புகிறேன். புதிய ஸ்ரீமூலம் சபையிலும் புதிய சட்டசபையிலும் அங்கத்தினர்கள் பொறுப்புள்ள தங்கள் பொறுப்புக்களுக்கு ஏற்றவர்களெனக் காட்டிக் கொள்வார்களென நம்பிக்கை கொள்கிறேன். மேலும், அரசியல் சீர்திருத்தமுடைய பற்பல பிரிவுகளின் பிரதிநிதிகளுக்கும் எப்பொழுதும் வேற்றுமைகள் நிகழ்ந்துகொண்டு தானிருக்கவேண்டுமெனினும், இந்நாட்டின் ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் இவ்வளவு அதி பெருந்தன்மையாய்ச் சமைந்திருக்கும் வகுப்புவாரி ஆசனங்களின் அமைப்பு உருவானது, காலஞ்சென்ற மகாராஜாவின் அருமைப் பின்னடைந்து வழிமென யான் உண்மையாய் நம்புகிறேன்; திருவிதாங்கூர் சட்டசபையிலும் ஸ்ரீமூலம் சபையிலுமுள்ள எல்லா அங்கத்தினர்களும் வகுப்பு வேற்றுமை சமய வேற்றுமையின்றி, நாட்டின் நன்மைப் பெருக்கிற்கான ஒரு பொது விருப்பத்தாலும், தங்கள் அரசர்பால் அசைவற்ற பக்தியும் பற்றுதலுங்கொண்ட ஓர்க்கத்தினர்களாய் ஒன்றுபட்டுழைப்பார்களென யான் நம்புகிறேன்.”

51. பிரபு அவர்கள் பிறகு புதிய திருவிதாங்கூர்ச் சட்டசபை மன்றத்திற்கு அஸ்திவாரக்கல் நாட்டுகிறார்கள். பிறகு எக்ஸிலென்ஸியவர்கள் வைஸ்ராய் தம்பதிகளுக்கும் திருவனந்தபுரம் மகளிர் கல்லூரியில் எக்ஸிலென்ஸியவர்கள் மஹாராஜா திருவுளத்திற்கும் சேர்ந்து கூடுகிறார்கள். பின்னர் வைஸ்ராய் தம்பதிகள் பந்தலைவிட்டு புறப்பட்டனர்; மஹாராஜா திருவுளங்கொண்டு அன்னவர்களை மோட்டார்க்கார்களுக்கு அழைத்துச் சென்றனர். வைஸ்ராய் அவர்கள் நேராக விருந்தினர் மன்றத்திற்குச் சென்றார்கள்; வைஸ்ராயவர்களின் சீமாட்டியார் பக்திவிலாசத்திற்கு (திவானுடைய உத்தியோகஸ்த உறைவிடம்) சென்றார்கள்.

52. காலை 10-30 மணிக்குச் சீமாட்டியார் பக்திவிலாஸத்தில் சென்று சேர்ந்து ஸி மென்லிக்ளப் என்னும் மாதர்கூட்டத்தினுடையவும் விமென்ஸ் கௌன்ஸில் ஆப் ஜெனிவ் என்னும் மாதர்களின் உதவி ஆலோசனைச் சபையினுடையவும் அங்கத்தினர்களுக்குப் பேட்டி அளித்தார். ஆங்கு ஒரு சிறிய நாடகம் நடிக்கப்பட்டது; அதன்பின் சீமாட்டியார் விருந்தினர் மன்றத்திற்குத் திரும்பினார்கள்.

53. முற்பகல் 11 மணிக்குப் பிறகு வில்லிங்டன் சீமாட்டியார் ஒரு எயிடிகாங்குடன் சித்திரக்கலைச்சாலை (ஸ்கூல் ஆப் ஆர்ட்ஸ்) முறைப்படியல்லாமல் பார்வையிட்டார். ஆங்கு கவர்னர் ஜெனரலவர்களின் ஏஜெண்டும் கவர்ன்மெண்ட் செக்ரெட்டரியும் அவர்களை வாயிலில் வரவேற்றார்கள். கவர்னர் ஜெனரலவர்களின் ஏஜெண்டானவர் கைத்தொழில் டைரக்டரையும் ஸ்கூல் ஆப் ஆர்ட்ஸின் ஸூபரின்டெண்டையும் செவுத்தொழில் நிபுணரையும் சீமாட்டியாருக்கு அறிமுகம் செய்துவைத்தார். சீமாட்டியாரை கலைச்சாலையின் சுற்றும் அழைத்துச்சென்று ஆங்கு உண்டாக்கப்பட்டுக் காட்சி அறையில் வைக்கப்பட்டிருக்கும் சாமான்கள் அன்னவருக்குக் காண்பிக்கப்பட்டன. சாமான்கள் செதுக்கும் பிரிவு, மண்பாத்திரங்கள் முனையும்பிரிவு, தச்சுவேலைப்பிரிவு, செருப்பிரிவு முதலிய வேலையிடங்களைச் சீமாட்டியார் பார்வையிட்டனர். சீமாட்டியார் ஆங்கு எல்லாவற்றையும் கண்டு மிகக் களிப்புற்று, அக்கலைச்சாலையில் உண்டாக்கப்பட்ட தந்தசாமான்களிலும் மரச்சாமான்களிலும் சிலவற்றைத் தெரிந்தெடுத்துக்கொண்டார். பின்னர் அவர்கள் அக்கலைச்சாலையை விட்டகன்றனர்.

54. பகல் 12 மணிக்கு மஹாராஜா திருவுளங்கொண்டு அரசப் பிரதிநிதியவர்களை விருந்தினர் மன்றத்திற்சென்று அந்தரங்கமாகப் பேட்டி கண்டார்கள்.

55. வைஸ்ராய் தம்பதிகளின் புறப்பாடு இரகசியமாயிருந்தது. மஹாராஜா திருவுளங்கொண்டும் ஜூனியர் மஹாராணி திருவுளங்கொண்டும், மூத்த இளையராஜாவும் இளையராஜா அவர்களும் பிற்பகல் 3 மணிக்கு விருந்தினர் மன்றத்திற்குச் சென்று வைஸ்ராய் தம்பதிகளுடன் ரெயில்வே ஸ்டேஷனுக்கு வந்தனர். இரண்டும் சட்டசம்பந்தமாயும் அர

சியமைப்பு சம்பந்தமாயுள்ள உபதேசகரும் சீப் ஜஸ்டிஸும் நாயர்பட்டாளம் கமண்டான்டும் பிரிவிலியர் ஆக்டிங் ஸ்பெஷல் ஆபீஸரும் வைஸ்ராய் தம்பதிகளிடம் விடைபெற்றுக்கொள்ளும்பொருட்டு திருவனந்தபுரம் சென்ட்ரல் ரெயில்வேஸ்டேஷனில் ஆஜராயிருந்தனர். வைஸ்ராய் தம்பதிகளும் பரிவாரங்களும் பிற்பகல் 3-30 மணிக்கு (ஸ்டான்டர்ட் மணிநேரம்) திருவனந்தபுரத்திலிருந்து புதுக்கோட்டைக்கு ஸ்பெஷல் ட்ரெயினில் சென்றனர். வைஸ்ராயவர்களின் புறப்பாட்டின்மேல் 31 ஆசாரவெடிகள் தீர்க்கப்பட்டன.

56. ராடென்டன் பிரபுவிற்காக இடம்பாளையத்தில் ஒருவேட்டைத்தாவளத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு, அதன் பொறுப்பானது வேட்டைப் பிராணிகளின் பாதுகாப்பாளரான மி: எஸ். வி. எச். ராபின்ஸனிடம் ஒப்புவிக்கப்பட்டிருந்தது. ராடென்டன் பிரபுவும் மி: வாலேஸ்றும் டிஸெம்பர் மாதம் 12 ஆம்தேதிமுதல் 17-ஆம்தேதிவரை அந்தவேட்டைத் தாவளத்தில் தங்கியிருந்தனர். இந்தக் காலத்தில் ராடென்டன் பிரபு ஒரு காட்டியானையைச் சுட்டார். காப்டன் பெயர்லி அவருடனிருந்தார்.

57. இந்தச் சுற்றுப்பிரயாணத்தை யொட்டிப் பிரத்தியேகமாய் மகிழ்ச்சி தரக்கூடியதாயிருந்த ஒரு விஷயமென்னவென்றால், வைஸ்ராய் தம்பதிகள் கடந்துசென்ற பற்பல வழிகளிலும் திரள் திரளாகக் கூடியிருந்து, வைஸ்ராய் தம்பதிகளின் தரிசனம் கிடைக்கும்பொருட்டுத் தங்கள் நோக்கைப் பதிவுசெய்ய ஏராளமாகப் புறப்பட்டுவந்தும், இருவிதமான ஜனங்கள் வைஸ்ராய் தம்பதிகளை மிக்க உள்ளன்போடு ஆர்ப்பாட்டமாக உபசரித்ததேயாம். சுற்றுப்பிரயாணத்தின்போது காலநிலை மொத்தத்தில் அனுகூலமாகவும் இன்பமாகவும் இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. சிறந்த அதிதிகள் தங்கள் விஜயத்தைப் பெரிதும் இன்புற அனுபவித்ததாகக் கூறியது மகிழ்ச்சி தரக்கூடியதே.

58. மேன்மைபொருந்திய வைஸ்ராயவர்களின் விஜயத்திற்கான ஸ்பெஷல் ஆபீஸராகப் பிரத்தியேக அலுவலிலிருந்த தேவிகுளம் கம்மிஷனரும் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுமான மி: டி. எச். காமரான், நாயர்பட்டாளம் கமண்டான்ட் லெப்டினண்ட் கர்னல் ஜி. எப். டர்னர், போலீஸ் கம்மிஷனர் ராவ் பஹதூர் என். ராமானுஜ அய்யங்கார், நிலவரி வருமானவரிக் கம்மிஷனர் மிஸ்டர் கெ. ஜார்ஜ், ஆக்டிங் சீப் என்ஜினியர் மி: எல். எச். ஜேகப், நாயர்பட்டாளம் 1-ஆம் பற்றாலியன் கமான்டான்ட் காப்டன் டபிள்யூ. எம். பெயர்லி, பொதுஜனாரோக்கிய இலாகா டெப்யுடி டிரெக்டர் டாக்டர் கெ. ராமன் தம்பி, தர்பார் பிஸிஷன் டாக்டர் ஸிம்ஸன், டெப்யுடி தர்பார் பிஸிஷன் மிஸிஸ் புன்னன் லூக்கோஸ், வனம் கன்ஸர்வேற்றர் மி: ஆர். தனுக்கோடிப்பிள்ளை, வேட்டை ஜந்துக்களின் பாதுகாப்பாளர், மி: எஸ். வி. எச். ராபின்ஸன், கோட்டயம் ஆக்டிங் எக்ஸிக்யுடிவ் என்ஜினியர் மி: ஐ. ஸி. சாக்கோ, கொல்லம் எக்ஸிக்யுடிவ் என்ஜினியர் மி: வி. அரிகர அய்யர், வர்க்ஸ் ஷாப்ஸ் அன்ட் ஸ்டோர்ஸ் டிவிஷன் எக்ஸிக்யுடிவ் என்ஜினியர் மி: எஸ். எஸ். கிருஷ்ண அய்யங்கார், திருவனந்தபுரம் டிவிஷன் எக்ஸிக்யுடிவ் என்ஜினியர் மி: கெ. கோவிந்தப்பிள்ளை, வாட்டர் வர்க்ஸ் டிவிஷன் எக்ஸிக்யுடிவ் என்ஜினியர் மி: வி. பாலகிருஷ்ண ராவ், எலெக்ட்ரிகல் என்ஜினியர் மி: கெ. பி. பத்மநாப மேனவன், கோட்டயம் திவான் பேஷ்கார் மி: ஆர். வைத்தியலிங்கம் பிள்ளை, கொல்லம் ஆக்டிங் திவான்பேஷ்கார் மி: என். எஸ். ராமன்பிள்ளை, திருவனந்தபுரம் திவான்பேஷ்கார் மி: பி. விசுவநாத அய்யர், ஸர்க்கார் அச்சுக்கூடம் ஸூபெரின்டென்ட் மி: டி. நீலகண்டப்பிள்ளை, கோட்டயம், கொல்லம், திருவனந்தபுரம் போலீஸ் டிஸ்ட்ரிக்ட் ஸூபெரின்டென்டுகள், போலீஸ் ட்ராபிக் ஸூபெரின்டென்டு, விருந்தினர் மன்றத்தின் ஸூபெரின்டென்டு, திருவனந்தபுரம் கொல்லம் தாசில்தார்கள், ஆகிய இவர்கள் எல்லாரும் வைஸ்ராய் தம்பதிகளின் விஜயத்தைவெற்றிபெற நடத்திவைக்கும் விஷயமாய்த் தளராது உழைத்ததற்காகக் கவர்ன்மெண்டார் இவ்வுத்தியோகஸ்தர்களுக்கு நன்றி செலுத்துகிறார்கள். இவ்விஜயத்தையொட்டிய ஏற்பாடுகளின் முழுப்பொறுப்பையும் தாங்கிவந்த தேவிகுளம் கம்மிஷனரும் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுமான மி: டி. எச். காமரானுக்குக் கவர்ன்மென்டார் பிரத்தியேகமாய் நன்றி செலுத்துகின்றனர். இவ்வுத்தியோகஸ்தர் பளுவானவையும் கௌரவமானவையுமாகிய அலுவல்களை நிறைவேற்றவேண்டியிருந்தது; இவர் இந்த அலுவல்களைத் திறமையாகவும் கவர்ன்மென்டாருக்குத் திருப்தியுண்டாகுமாறும் நிறைவேற்றினார். சம்பந்தப்பட்ட எல்லா இலாகாக்களிலுமுள்ள கீழுத்தியோகஸ்தர்கள் உற்சாகத்தோடும் வெறுப்புக்கொள்ளாமலும் உழைத்த உழைப்பையும் அரசாங்கத்தார் பாராட்டுகிறார்கள்.

59. சென்னை கவர்ன்மென்டார் 'ப்ளூபெல்' என்றுசொல்லப்படும் அவர்களுடைய போட்டை உபயோகித்துக்கொள்ள அனுமதி தந்ததற்காகவும், வேட்டைத் தாவளத்தில் வேண்டிய ஏற்பாடுகளுக்காக அவர்கள்செய்த எல்லா உதவிக்காகவும் கவர்ன்மென்டார் அந்தக் கவர்ன்மென்டாருக்குத் தங்கள் அபிமானபூர்வ வந்தனங்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றனர்.

60. மிஸ்டர் ஆண்டிடன், மிஸ்டர் கசமரன், மிஸ்டர் லாம்பார்டு, மிஸ்டர் ஹென்டர்ஸன், மிஸ்டர் வார்டு, கொல்லம் மெஸ்ஸேர்ஸ் ஹாரிஸன் அண்ட் க்ராஸ்பீல்டு லிமிடெட் கம்பெனியைச்சேர்ந்த மி: பார்க்ஸும் மி: டன்னும், மி: ஜி. எச். க்ருப்பீகல், நகரசபைகளின் பிரதிநிதிகளாக கோட்டயம், கொல்லம், திருவனந்தபுரம் நகரசபைகளின் தலைவர்கள், ஆகியவர்கள் இவ்விஜயத்தையொட்டிப் புரிந்த சிறந்த ஊழியங்களை கவர்ன்மெண்டார் நன்றியுடன் ஒப்புக்கொள்கிறார்கள்.

61. இவ்விஜயத்தையொட்டித் திருவிதாங்கூர் சாரணச்சிறுவர்களும் திருவிதாங்கூர் சாரணச்சிறுமிகளும் செய்த ஊழியங்களைப்பற்றிய கவர்ன்மெண்டாரின் மதிப்பை அவர்கள் ரேகைப்படுத்துகின்றனர்.

62. இறுதியாக வைஸ்ராய் தம்பதிகள் ஸம்ஸ்தானத்தில் சுற்றுப்பிரயாணம் செய்யும்பொழுது எல்லாக் கட்டங்களிலும் திருவிதாங்கூர் ஜனங்கள் அன்போடும் உற்சாகத்தோடும் பக்தியோடும் அன்னவர்களை வரவேற்றதைப்பற்றி கவர்ன்மெண்டார் நன்றி பாராட்டுகிறார்கள்.

முஹம்மது ஹபீபுல்லா
திவான்.

(A true translation).

T. Ramalingam Pillai,
Head Translator to Government.